# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 6097/விசாரணை/E/2021**

திரு.T.G.நீலன் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கிண்டி, சென்னை மாவட்டம். .. பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 07.08.2025 அன்று முற்பகல் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது :-

1. *இவ்வாணை கிடைக்கப் பெற்ற 60 தினங்களுக்குள், கிண்டி வட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலர், கிண்டி தலைமை நிலஅளவருடன் இணைந்து*

- *மேல்முறையீட்டாளர் 22.12.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவில் இனம் 2-ல் கோரியுள்ள கோப்பினை மீண்டும் தேடி கண்டுபிடித்து, கிடைக்கப் பெற்றால் அதன் நகலையோ*

- *மேல்முறையீட்டாளர் கோரிய கோப்பு கிடைக்கப் பெறாதபட்சத்தில். அக்கோப்பினை மீள உருவாக்கி அதனையோ*

- *மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 7(6)-ன் கீழ் கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, மேல்முறையீட்டாளர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலை இணைத்து ஒரு அறிக்கையாகவும்,*

- *மேல்முறையீட்டாளர் கோரிய கோப்பு கிடைக்கப் பெறாதபட்சத்தில், அதற்கு யார் பொறுப்பு என்பதை கண்டறிந்து, சம்பந்தப்பட்ட அலுவலர் மீது துறைரீதியான நடவடிக்கை மேற்கொண்டு, அது குறித்த அறிக்கையையும்,*

*இவ்வாணையத்தில் 21.11.2025 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு கிண்டி வட்டாட்சியர், கிண்டி வட்டாட்சியர் அலுவலக தலைமை நிலஅளவர், வட்ட சார்*

*ஆய்வாளர் மற்றும் இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் ஆகியோருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.*

2. மேற்குறித்த உத்தரவிற்கிணங்க, கிண்டி வட்டாட்சியர் அலுவலக தலைமையிடத்து துணை வட்டாட்சியர்/பொதுத் தகவல் அலுவலர் திருமதி.புவனேஸ்வரி 03.02.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி, தான் தற்போது தான் பொதுத் தகவல் அலுவலராக பணியேற்றதாகவும், மேல்முறையீட்டாளர் கோரிய கோப்பு TSR நகலின் (2024/0153/02/040859, TR Dt.28.9.24 கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், அதனை மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி வைத்து, அது குறித்த அறிக்கையை இரு தினங்களில் சமர்ப்பிப்பதாக தெரிவித்தார்.

3. அதன்படி, கிண்டி வட்டாட்சியர் அலுவலக தலைமையிடத்து துணை வட்டாட்சியர்/பொதுத் தகவல் அலுவலர் 05.02.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, மேல்முறையீட்டாளருக்கு அவர் கோரிய கோப்பினை நகலை (116 பக்கங்கள் கொண்டது) இணைத்து 04.02.206 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக 04.02.206 அன்று பதிவஞ்சலில் அனுப்பி வைத்துள்ளதாக தெரிவித்து, மேற்குறித்த கடிதத்தின் நகல் மற்றும் பதிவஞ்சலில் அனுப்பியதற்கான அஞ்சலக ரசீதின் நகல் ஆகியவற்றை ஆணையத்தின் முன் தாக்கல் செய்ததன் அடிப்படையில், இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஆணை நாள் : 06.04.2026**

**ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 6097/விசாரணை/E/2021**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கிண்டி, சென்னை மாவட்டம்.

திரு.T.G.நீலன் த/பெ.திரு.கோவிந்தராஜ்
112, P.H. Road,
சென்னை-84.

Copy to: File

RJ/PS 7.4